முதன்மை மாவட்ட நீதிமன்றம், ஈரோடு
SPL. SC No. 16/2021
நாள் : 18.09.2025

அ.சா.1 : தங்கலட்சுமி

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** : (அரசு தரப்பில் 1ம் சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

எதிரியை நான் சட்டபூர்வமாக இதுவரையிலும் விவாகரத்து ஏதும் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரிக்கும் எனக்கும் தற்போது வரையிலும் கணவன் மனைவி உறவு உள்ளது என்றால் சரிதான். நான் திருமணம் ஆன தேதியில் பவானி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவலராக பணியாற்றி வந்தேன் என்றால் சரிதான். திருமணம் ஆன தேதியில் எதிரியின் உறவினர்கள் பவானி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பஞ்சாயத்து பேசி இருவரும் விவாகரத்து பெற்றுக் கொள்ள வேண்டும் என்று பேசி முடிவு செய்து எழுதி வாங்கப்பட்டது என்றால் சரிதான். பவானி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் சி எஸ் ஆர் போட்டு இந்த மனுவை முடித்தார்கள் என்றால் சரிதான். எதிரியின் பெற்றோர்கள் நான் ஏற்கனவே திருமணம் ஆனவள் என்பதை மறைத்து எதிரியை நான் மீண்டும் திருமணம் செய்து கொண்டேன் என்பதால் தான் அவர்கள் புகார் கொடுத்தார்கள் என்றால் இல்லை. என்ன புகார் கொடுத்தார்கள் என்றால் ஏற்கனவே நான் வேறு நபருடன் பழகி வந்தேன் என்றும் அதனால் நான் எதிரியை திருமணம் செய்ததை ஏற்க முடியாது என்று கூறி தான் புகார் கொடுத்தார்கள். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியிலிருந்து சுமார் பத்து நாட்கள் கழித்து தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். பத்து நாட்களிலும் நான் காவல்துறையில் தான் பணியில் இருந்தேன் என்றால் இல்லை நான் மெடிக்கல் லீவில் இருந்தேன். இந்த சம்பவத்தினால் காயம் ஏற்பட்டது என்று காட்டுவதற்கு நான் போலீசாரிடம் ஆவணங்கள் ஏதேனும் கொடுத்தேனா என்றால் இல்லை எலக்சன் டூட்டி என்பதால் மெடிக்கல் ஸ்டோரில் இருந்து மாத்திரை வாங்கி சாப்பிட்டு எலக்சன் டூட்டிக்கு சென்று விட்டேன். நான் இந்த வழக்கு சம்பவம் சம்பந்தமாக எத்தனை முறை புகார் கொடுத்தேன் என்றால் பெருந்துறை ஆய்வாளரிடம் புகார் கொடுத்தேன், காஞ்சிக்கோயில் காவல் நிலையத்திற்கு தபால் மூலம் புகார் அனுப்பினேன் பின்னர் காஞ்சிக்கோயில் காவல் நிலையத்தில் நேரிலும் சென்று புகார் கொடுத்தேன். டி எஸ் பி அலுவலகத்தில் புகார் கொடுத்தேனா என்றால் அவர்கள் விசாரணைக்கு என்னை அழைத்தார்கள் புகார் ஏதும் டிஎஸ்பி இடம் கொடுக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் அ.த.சா.ஆ.1 புகார்

SAMEENA S
Digitally signed by SAMEENA S
Date: 2025.09.18 18:08:29 +0530

எப்போது கொடுக்கப்பட்டது என்றால் டிஎஸ்பி என்னை அலுவலகத்தில் விசாரணைக்கு அழைத்துஅதன் பின்பு கொடுக்கப்பட்ட புகாராகும். அ.த.சா.ஆ.1 புகாருக்கு பின்பு என்னை டிஎஸ்பியோ, போலீசாரோ விசாரணை செய்யவில்லை. டிஎஸ்பி என்னை விசாரித்த போதும் நான் முதல் விசாரணையில் சொன்னது போல் தான் சொன்னேன். எதிரி என்னை திருமணம் செய்த போது அவர் வேலை ஏதும் பார்க்கவில்லை கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தார் என்றால் சரிதான். நான் எதிரியை திருமணம் செய்த போது எனது உறவினர்கள் எவரும் வரவில்லை என்றால் சரிதான். எதிரியின் உறவினர்கள் வந்தார்கள் என்றால் இல்லை எதிரியின் நண்பர்கள் தான் வந்திருந்தார்கள். திருமண செலவை நானும் எதிரியும் பேசி தான் நான் செய்தேன் என்றால் சரிதான். நான் எதிரிக்கு வாங்கி கொடுத்ததாக சொல்லப்படும் பைக் எனது பெயரில் தான் இருந்தது என்றால் சரிதான், நான் எனது பெயரில் லோன் போட்டதால் அது எனது பெயரில் இருந்தது அது எதிரி தான் வைத்திருந்தார் பின்னர் எதிரியின் வீட்டில் இருந்து தான் ஷோரூம்காரர்கள் பைக்கை எடுத்து சென்றார்கள். பைக் எனக்காக தான் வாங்க எனது பெயரில் வாங்கப்பட்டது என்றாலும் நான் லோனை கட்டாததால் தான் ஷோரூம்காரர்கள் பைக்கை எடுத்து சென்று விட்டார்கள் என்றும் எதிரிக்கு நான் பைக் வாங்கி கொடுத்தேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் கொடுத்த இரண்டு புகாரையும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் மறைத்து விட்டேன் என்றால் இல்லை. நான் காஞ்சி கோவில் காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சென்றபோது உதவி ஆய்வாளர் அங்கு இல்லை என்பதால் அவர் இருக்கும் போது கொடுக்கச் சொல்லி என்னை திரும்ப போகச் சொல்லி விட்டார்கள் பின்னர் பெருந்துறை காவல் நிலையத்தில் புகார் கொடுக்கச் சென்றேன் அப்போது உதவி ஆய்வாளர் எலக்சன் டூட்டியாக வெளியே சென்றிருப்பதாகவும் அவர் இருக்கும் போது வந்து புகார் கொடுக்கச் சொன்னார்கள் அதனால் நான் திரும்பி வந்து விட்டேன். நான் புகாரில் சொன்னது போல் எந்த சம்பவமும் நடைபெறாததால் தான் உடனே நான் புகார் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல இந்த சம்பவம் நடந்த உடன் எலக்சன் டூட்டிக்கு சென்று விட்டதாலும் பின்னர் இரண்டு காவல் நிலையங்களிலும் நான் கொடுத்த புகாரை எடுத்துக் கொள்ளாததாலும் தான் புகார் கொடுப்பதில் கால தாமதம் ஏற்பட்டது. நான் சொன்னது போல் எந்த சம்பவமும் நடக்காததால் தான் காவல் நிலையத்தில் எனது புகார் எடுக்கப்படவில்லை என்றாலும் பின்னர் நான் காவல்துறையில் பணியாற்றி வருவதால் எனது வற்புறுத்தலின் பேரில் தான் புகார் எடுக்கப்பட்டது என்று சொன்னாலும் சரியல்ல. நான் ஏற்கனவே திருமணம் செய்ததை

SAMEENA S

Digitally signed by SAMEENA S
Date: 2025.09.18 18:08:39 +0530

மறைத்து எதிரியை திருமணம் செய்து கொண்டதால் அதை தெரிந்துகொண்ட எதிரி அதை குறித்து கேட்டபோது அதை மறைக்க எதிரி மீது பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் நான் இதுவரையிலும் விவாகரத்து பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி வேறு திருமணம் முடித்து ஒரு குழந்தையுடன் குடும்பமாக வாழ்ந்து வருகிறார் நான் மதுரையில் இருப்பதால் தான் விவாகரத்துக்கான எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. நான் சொன்னது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும் எனக்கும் எதிரிக்கும் இடையில் எந்தவித பிரச்சனையும் இல்லை என்றாலும் அதனால் தான் தற்போது வரையிலும் கணவன் மனைவியாக உறவு நீடித்து வருகிறது என்றாலும் இரண்டாம் திருமணம் பற்றி எதிரி என்னிடம் கேட்டதால் தான் இந்த பொய் வழக்கு எதிரி மீது போடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

நீதிமன்ற கேள்வி : நீங்கள் தற்போது எங்கு இருக்கிறீர்கள்?

பதில் : நான் சென்னை ராயபுரத்தில் இருந்து வருகிறேன். ஆந்திராவில் நெல்லூரில் ஒரு தனியார் கம்பெனியில் வேலை பார்த்து வருகிறேன். தினம் சென்னையிலிருந்து நெல்லூர் சென்று வருகிறேன்.

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

SAMEENA S

Digitally signed by SAMEENA S
Date: 2025.09.18 18:08:48 +0530

Principal District and Sessions Judge,
Erode.